
# திராவிடத்தால் வாழ்கிறோம்

832

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# இது பெரியார் மண்

ர.பிரகாசு

8

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

## சதுர்வேதி ஒழிந்து, சமத்துவம் மலர்ந்தது!

‘முதலில் ஒழிக்கப்பட வேண்டியது, ‘வர்க்க வேறுபாடா‘, ‘சாதி வேறுபாடா’ என்பதில் தந்தை பெரியாருக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையில் கருத்து மாறுபாடு இருந்தது. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே சாதியப் பிரச்சினையுடன் வர்க்க அடிமைத்தனத்தையும் ஒழிக்க, பண்ணை ஆதிக்கத்துக்கு எதிராக களத்தில் இறங்கிப் போராடியது பெரியாரால் தொடங்கப்பட்ட ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’. அப்படி ஒரு போராட்டத்தால் பலன் அடைந்த கிராமம்தான் இடையாற்று சதுர்வேதிமங்கலம்.


1950-கள் வரை லால்குடி சுற்றுவட்டாரம் முழுவதும் கூகூர் பரமசிவம்பிள்ளை, தாத்தாச்சாரியார், மணக்கால் பாப்பாத்தி அம்மாள், கொண்டையம்பட்டி செட்டியார் என விரல் விட்டு எண்ணக்கூடிய சில பண்ணையார்களிடம்தான் இருந்தன. அதில் கொள்ளிடக்கரையில் உள்ள ஒரு சிறிய கிராமம் இடையாற்று சதுர்வேதிமங்கலம். மொத்த ஊரும் நடேச ஐயர் வசம். அதனால்தான் அப்பகுதியில் முதன்முதலில் மின்சார வசதி பெற்ற கிராமமும் கூட.

அங்குள்ள பெரியவர் சீலி பகுதியைச் சேர்ந்த, இன்ஸ்பெக்டர் என மக்களால் அழைக்கப்பட்ட ஒருவர் மூலமாக, 1940-களில் திராவிடர் கழகம் அங்கு அரும்புவிட்டது. ரகசியமாக வீடு வீடாகச் சென்ற ‘விடுதலை’ பத்திரிகை அவர்களின் சுயமரியாதைச் சிந்தனையைத் தட்டியெழுப்பியது. அதன் விளைவாய், ஊரே கருப்புச் சட்டைக்கு மாறியது. திருவிழாக்கள் நின்றன. சதுர்வேதி அழிந்து இடையாற்றுமங்கலமானது. பின்னர், 1952-இல் தேவசகாயம், ராயப்பன், சந்தானம், சாமிக்கண்ணு போன்றோர் அப்பகுதியில், ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்க’த்தைத் தொடங்கினர்.

‘நிலம் என் உரிமை’ என்ற முழக்கம் ஓங்கி ஒலித்தது. வயலில் இறங்க மறுத்தனர் ஊர்மக்கள். பொறுமை தாங்காத நடேச ஐயர், அடியாட்களுடன் சென்று, தேவசகாயத்தின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினார். ஆனால், பண்ணையின் அடாவடிக்கு மக்கள் அஞ்சவில்லை. காவல்துறை துணையோடு பண்ணை ஆட்களே வயலில் இறங்கி வேலை பார்த்தனர். காவல்துறையும் ஒரு கட்டத்தில் கை விரித்துவிட, பண்ணை ஆட்கள் சரணடைந்தனர். ஊரை விட்டு வெளியேறினர். 2,000 ஏக்கருக்கு அதிகமான நிலம் ஜாதிப் பாகுபாடு இல்லாமல் அனைத்துக் கூலிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் பங்கிடப்பட்டது. ஊராட்சி மன்றத் தலைவராக சுழற்சிமுறையில் எல்லா சமூகங்களுக்கும் வாய்ப்பு கிடைத்தன.

**தேவசகாயம் பின்னாளில் ராவணன் என பெயரை மாற்றிக்கொண்டார்.**








ஆறேழு முறை இடையாற்றுமங்கலத்திற்குச் சென்ற பெரியாரின் நினைவாக, லால்குடியில் திருமண மண்டபம், புரட்சிக்கவிஞர் திருமண மாளிகை ஆகியவை உள்ளன. இன்றும் திராவிடர் கழகம் உயிர்ப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் ஆணிவேராக இருந்த முத்துச்செழியன், கடந்த ஆண்டு டிசம்பரில் மறைந்தார். இடையாற்றுமங்கலத்தில் இருந்து மட்டும், சட்ட எரிப்புப் போராட்டத்தில் 27 பேர் பங்கேற்று சிறைக்குச் சென்றனர். அவர்களில் உயிரோடு இருப்போருக்கு, தேவசகாயத்தின் மகன் வால்டர் இன்றும் உதவித்தொகை வழங்கிக் கொண்டிருக்கிறார். இன்றும் இடையாற்றுமங்கல மக்களின் உள்ளத்துடன் பெரியார் ஒன்றியிருக்கிறார்.

ஆனால், இடையாற்றுமங்கலத்துடன் முடிந்துவிடக்கூடியது அல்ல இந்த வரலாறு. அன்றைக்கு லால்குடி முழுவதும் திராவிடர் கழகம், திராவிட விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தை இயக்கிக்கொண்டிருந்த குடந்தை ஜோசப்பை நோக்கியும் நீள்கிறது, இந்த வரலாறு.

**...பயணிப்போம்.**

## `இந்து தேசியம்’ நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு!




பேராசிரியர் தொ.பரமசிவன் எழுதி ஏற்கெனவே வெளிவந்த ‘நான் இந்துவல்ல நீங்கள்?’, ‘இந்து தேசியம்’, ‘சங்கரமடம்– தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள்’, ‘இதுதான் பார்ப்பனியம்’, ‘புனா ஒப்பந்தம்; ஒரு சோகக்கதை’ ஆகிய ஐந்து சிறிய நூல்களின் தொகுப்பு நூல் ‘இந்து தேசியம்’. குறிப்பாக முதல் கட்டுரையில் ‘வெள்ளைக்காரன் வந்து நமக்கு இந்து என்று பொதுப் பெயர் வைத்தானோ, இல்லையோ, நாம் பிழைத்தோம்’ என்று சங்கராச்சாரியார் கூறியது முதல், இந்து மதத்தில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நிலை வரை ஆதாரங்களை அடுக்கியுள்ளார்.

அதேபோல, பவுத்த, சமண சமயங்களை மக்களிடம் இருந்து அகற்ற முயன்ற ஆதிசங்கரர் குறித்தும், இரட்டை வாக்குரிமை–தனித்தொகுதி குறித்தும், விரிவான அலசல்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ் வாசகர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இந்தத் தொகுப்பு நூலை, **‘திரவிடியன் ஸ்டாக் பதிப்பகம்’** ‘Hindu Nationalism’ என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளது.

ஆஸ்திரேலிய பெரியார் – அம்பேத்கர் வாசகர் வட்டத்தைச் சேர்ந்த சுமதி விஜயகுமார் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். “நீங்கள் உங்களை ஓர் இந்து என்று நினைத்தால் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது. வாசித்துவிட்டால், அதன்பிறகு ஒருவேளை உங்களிடம் நீங்கள் எந்த மதம் என்று கேட்டால், பதில் கூறத் தயங்குவீர்கள். மதம் என்பது ஒரு நபரின் விருப்பம். ஆனால் ஒரு நாட்டின் அரசியல் மதத்தின் மீது தாங்கியுள்ளது என்றால், எதுவும் அப்படியே இருக்காது. இந்தியா மதச்சார்பில்லாத நாடாகவே இருக்கட்டும்” என்ற மொழிபெயர்ப்பாளர் குறிப்பு, இந்நூல் வட இந்தியாவிற்கும் பயணிக்க வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது.

நூலைப் பெற : 90927 87854

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

60

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**

## யாருடைய கட்டுப்பாட்டில் ஆதீனம்?

**‘தமிழ்நாடு அரசின் காவல்துறை ஒரு தரப்புக்கு ஆதரவாகப் பாரபட்சமாகச் செயல்படுகிறது’ என்கிறாரே, மதுரை ஆதீனம்?**

பா.ஜ.க. தனது அரசியல் நோக்கங்களுக்காக, தனக்குத் தோதானவர்களைக் கொண்டு நடத்திய ‘அகில உலக சைவ சித்தாந்த மாநாட்டு’க்கு வரும்போது, உளுந்தூர்பேட்டை சிக்னலில் ஒரு கார் வந்து மோதியதால் நிலைகுலைந்ததாகவும், தன்னைக் கொல்ல நடந்த சதி இது என்றும், காரில் இருந்தவர், தொப்பி போட்டிருந்தார்- தாடி வைத்திருந்தார் என்றும் தற்போதைய மதுரை ஆதீனம், ஊடகத்தினரிடம் தெரிவித்தார். ஊடகத்தினர் அப்போது, ‘இந்த விபத்து குறித்து புகார் தெரிவித்தீர்களா?’ என்று கேட்டதற்கு, ‘சிவபெருமானிடம்தான் நான் புகார் கொடுக்க வேண்டும்’ என்றார். அத்துடன், ‘சிறுபான்மையினருக்குத்தானே இங்கே எல்லாமும் நடக்குது’ என்றும் ஆதீனம் தெரிவித்தார்.



‘மதுரை ஆதீனத்தை கார் மோதிக் கொல்ல முயற்சி’ என்ற தகவல் பரபரப்படைந்த நிலையில், விபத்து நடந்த இடத்தில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளைப் பரிசோதித்து போலீஸ் வெளியிட்டது. அதில், ஆதீனத்தின் கார்தான் படுவேகமாகப் போவதும், குறுக்கே வந்த கார் தனது வேகத்தைக் குறைத்து நிறுத்துவதும் பதிவாகியுள்ளது. இதன் அடிப்படையில், ஆதீனத்தின் கார் ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆதீனமோ, ‘காவல்துறை எங்கள் கார் மீது மோதியவர்களின் புகாரின் பேரில், நடவடிக்கை எடுக்கிறார்கள். நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். விபத்து நடந்தவுடனேயே அவசர எண் 100-க்கு தொடர்புகொண்டு சொன்னோம்’ என்றார். அவசர எண்ணுக்குத் தெரிவிப்பது தகவல்தான். புகார் என்பது தொடர்புடைய காவல் நிலையத்தில் அளிக்க வேண்டும். சட்ட நடைமுறைகள் எதையும் பின்பற்றாமல், தன்னைக் கொல்ல சதி என்ற ரீதியில், சிறுபான்மைச் சமுதாயத்தினர் மீது பழி போட ஆதீனம் முயற்சித்தது, தனிப்பட்ட விருப்பத்தாலா அல்லது பின்னணியில் இருந்து அவர் இயக்கப்படுகிறாரா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

> **“மதுரை ஆதீனத்தில் முன்பு தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள். மாற்று மதத்தினரையும் மதித்தனர்.”**

தமிழுணர்வுடன் சமய நல்லிணக்கத்தையும் கடைப்பிடித்தவர்கள் மதுரை ஆதீனத்தில் முன்பு தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள். மாற்று மதத்தினரையும் மதித்தனர். தமிழ்மொழியும் சைவ சமயநெறியும் இரு கண்கள் எனக் கருதிய தேவார மூவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் அவர்களால் புனரமைக்கப்பட்ட ஆதீனம் என்று பெருமையுடன் குறிப்பிடப்பட்டு வந்த மடத்தின் தற்போதைய தலைவராக இருப்பவர் அரசியல் அடியாளைப் போல பேசுவதும், செயல்படுவதும், அவர் தன்னுடைய சமயத்திற்கும் தமிழுக்கும் செய்கின்ற துரோகமாகும்.

**...வினா தொடரும்.**

# ஃப்ளாஷ்பேக்



## `மிசா’ காலத்தில் தலைவர் நடத்தி வைத்த மணவிழா!



1976-இல், நெருக்கடி நிலை காலத்தில் என் மகளின், சுயமரியாதைத் திருமணம் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அன்றைய ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம், காஞ்சிபுரம் சி.வி.அண்ணாமலை, என்.கே.எஸ்.கணேசன், மத்தூர் எஸ்.கே. **எம்.கே.சுப்பிரமணியம்** ஆறுமுகம் ஆகியோரும் பங்கேற்றனர். மணவிழா நேரத்தில், எதிர்க்கட்சியினர் எங்கள் கிராமத்தில் மின்சாரத்தைத் துண்டித்துவிட்டனர். தலைவர், தனது வாகனத்தில் வைத்திருந்த ஒலிபெருக்கி மூலம், மணவிழாவை நடத்தி வைத்து உரையாற்றினார். எங்கள் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல; எங்கள் கிராமத்தில் உள்ள அனைத்து உடன்பிறப்புகளுக்கும் மறக்க முடியாத வரலாற்று நிகழ்வாகும்.

**– எம்.கே.சுப்பிரமணியம், பள்ளிப்பட்டு ஒன்றிய அவைத்தலைவர், திருவள்ளூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# கருவூலம்

## நீதிக்கட்சி மாநாட்டில் பெரியார்!

1926-ஆம் ஆண்டு, நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வெற்றிவாய்ப்பை இழந்த பிறகு, தலைவர்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, கட்சியை, பலப்படுத்தத் திட்டமிட்டனர். ‘ஜஸ்டிஸ்’ இதழுக்கு சர் ஏ. இராமசாமி ஆசிரியர் பொறுப்பேற்று, மீண்டும் இதழுக்குச் செல்வாக்கு தேடினார். 1927-ஆம் ஆண்டு பனகல் அரசர் தலைமையில், மதுரையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் தந்தை பெரியார் கலந்துகொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131